# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**தாபனச் சுற்றறிக்கை இலக்கம் : 02/2018**

இலக்கம் 20,வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2018.02.09

பல்கலைக்கழக துணைவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகங்களின் பணிப்பாளர்கள்

**<u>பல்கலைக்கழக முறைமையில் ஊழியர்களின் இடமாற்றங்கள்</u>**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 78 ஆவது பிரிவு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் தாபன விதிக் கோவையின் IV அத்தியாயத்தின் I ஆவது உறுப்புரை மீது தங்களது கவனம் ஈர்க்கச் செய்யப்படுகின்றது.

பல்கலைக்கழகங்களுக்கிடையிலான இடமாற்றங்களை எதிர்பார்த்து முன்வைக்கப்பட்டுள்ள ஊழியர்களின் இடமாற்றங்கள் தொடர்பான விண்ணப்பங்களை வருடத்தில் மூன்று மாதத்திற்கொருமுறை கவனத்திற்கொள்வதற்கு 2017.12.07 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 977 ஆவது கூட்டத்தொடரின்போது தீர்மானிக்கப்பட்டது.

அதற்கிணங்க, உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட இடமாற்றங்கள் தொடர்பான விண்ணப்பங்களை உரிய உயர் கல்வி நிறுவகங்கள் / நிறுவகங்களின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மார்ச் மாதத்தின் இறுதி வேலை நாளன்று அல்லது அதற்கு முன்னர்
ஜூன் மாதத்தின் இறுதி வேலை நாளன்று அல்லது அதற்கு முன்னர்
செப்தெம்பர் மாதத்தின் இறுதி வேலை நாளன்று அல்லது அதற்கு முன்னர்
திசெம்பர் மாதத்தின் இறுதி வேலை நாளன்று அல்லது அதற்கு முன்னர்

மேலும், உயர் கல்வி நிறுவகம் / நிறுவகங்கள் வேறு முறைகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்னர் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான இடமாற்றங்களை எதிர்பார்க்கும் ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள 2012.01.04 ஆம் திகதிய 974 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மீது தங்களது கவனம் ஈர்க்கச்செய்யப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட தீர்மானம் 2018.03.02 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

தயவுசெய்து இதன் பிரகாரம், நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள்/சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. தொழிற்சங்களின் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கோப்பு இலக்கம் : UGC/HR/5/1